ஆக்ட்டை அமுல் நடத்தவில்லையென்று சொல்லி, ஸ்டிரைக் நோட்டீஸ்தான் கொடுத்தார்கள். நோட்டீஸ் கொடுத்த அடுத்த நாளே -மாஸ் லாக் அவுட்—400 பேர் வெளியே போகக்கூடிய நிலையில்—பண்ணியிருக்கிறார்கள். அங்கே டென்ஷன் இருக்கிறது; போலீசை வரவழைத்திருக்கிறார்கள். ஆகவே, அந்தப் போராட்டம் நடக்கிறது. அந்த லேபர் ஆக்டைத் தடுப்பதற்கு போலீசைக் கூப்பிட்டு விவகாரம் ஆக்கிவிடுவார்கள். இதில் கவர்ன்மென்ட் ஃபேர்ம் டெசிஷன் எடுக்க வேண்டும். 400 பேர் வயிற்றில் அடித்தால் இன்ஃப்ளேஷன் இன்னும் ஜாஸ்தியாகும்.

To whatever infinitesmal extent it is அந்தக் கொள்கையை ஒத்துக்கொள்கிறோம். அதனை எல்லாக் கட்சிகளும் பாராட்டும், ஆதரிக்கும். அதற்கு மத்திய அரசை வற்புறுத்துவோம். அந்த நிலையை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் முடித்துக்கொள்கிறேன்.

திரு. ந. தனசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து, அதனை அவன் கண் விடல்-' என்று வான்புகழ் வள்ளுவப் பெருந்தகை கூறியதற்கொப்ப, இந்த ஆட்சியை இவர்கள் கரத்தில், அண்ணாவின் வழிவந்த ஆற்றல் மிக்க மறவர்கள் கையில் ஒப்படைத்தால், சமுதாயத்தின் அடி மட்டத்தில், வாழ்வுப் போராட்டம் நடத்திகொண்டிருக்கிற அன்றாடம் காய்ச்சிகளான, பரட்டைத் தலையர்களான, ஏழை எளிய மக்களுக்கு நல்ல பல பணிகளை செய்வார்கள் என்று இந்த நாட்டு மக்கள் நம்பி, நாலரைக் கோடி மக்களின் நாயகனாக, புரட்சித் தலைவரை ஏற்று அவர் நமக்காக இதனைச் செய்வார், நமது வாழ்விற்கு வளம் உண்டாக்குவார் என்று நம்பி ஆட்சியை ஒப்படைத்தது, மிகச்சரியான செயல் என்பதை நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் ஒப்புக் கொள்ளக்கூடிய அளவிற்கு உள்ளதுதான் இன்றைய தினம் நாட்டின் நிலையை நன்கு உணர்ந்த நாவன்மை படைத்த மாண்புமிகு நிதி அமைச்சர் நாஞ்சிலார் படைத்த வரவு செலவு திட்டம். எத்தனையோ திட்டங்களை......................

(6) ஒழுங்குப் பிரச்சினைகள்.

[அ] அவையிலே எழுதிப் படிக்கலாமா என்பது குறித்து.

திரு. துரைமுருகன்: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். இந்த அவையிலே பேசுகிறபொழுது படிக்கலாமா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு).

1977 ஜூலை 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி, உங்களுடைய கட்சியிலேயே சிக்கலை ஏற்படுத்தி விடும். அவர் அனுமதி பெற்றுத்தான் பேசுகிறார். பேராசிரியர் சிலவற்றைப் படித்தபொழுது, உண்மையா என்று பார்த்து தலைவர் அனுமதித்தார். அதையும் நீங்கள் வேண்டாமென்று சொல்கிறீர்களா ?

திரு. துரை முருகன் : மேற்கோள் காட்டிப் பேசினார்கள். பேசுவதையே எழுதி வைத்துப் படித்தாரா ? பேசுவதையே எழுதி வைத்துப் படிப்பதுப் வேறு—மேற்கோள் காட்டுவது வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதி பெற்று சிலவற்றைப் படித்தார்.

திரு. துரை முருகன் : தவறான தகவலை நீங்கள் தருகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரிப்போர்ட்டை எல்லாம் படித்துக் காட்டினார்கள். அதைத்தான் நான் சொல்கிறேன்.

Thiru A. RAGHUMANKHAN : Your statement is completely wrong.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஏதாவது குற்றச் சாட்டு, புகார் கூறுவதாக இருந்தால், முன் அனுமதிக்காக தலைவரிடத்திலே காட்டி, அது உண்மையா என்பதற்காக காட்டி அதற்குப் பின்னர் படிக்கவேண்டும். சாதாரணமாக, கொட்டேஷன் படிக்கிறபொழுது, ஆதாரம் கேட்டால் சொல்ல வேண்டுமே தவிர, முன்கூட்டி காட்ட வேண்டிய அவசியம் இருந்ததில்லை. அவ்வாறு நான் ஏற்கெனவே இந்த அவையிலே பேசியிருக்கிறேன். ஆகவே, இல்லாத மரபை நீங்கள் ஏற்படுத்தாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புகார்களா, இல்லையா என்பது கூட அவைத் தலைவருக்குத் தெரியவேண்டும்.

திரு. க. அன்பழகன் : புகார் சொல்வதாக இருந்தால் தான் அவைத் தலைவருக்குக் காட்ட வேண்டுமே தவிர, கொட்டேஷன்கள் காட்டப்பட வேண்டியதில்லையென்பதை நான் அவைத் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.